ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௫. விபவஹூ ஐப்பசிமீ பகுதி ௰.
Vol 5. *October & November 1928.* No. 10

## கம்பநாட்டாழ்வார்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ், ஸ்ரீ. உப. வே.
T. N. அப்பனையங்கார்ஸ்வாமி எழுதுவது.]

கல்வியிற் பெரியவரென்றும் கவிச்சக்ரவர்த்தியென்றும் புலவர் போற்றும் புகழுடன் விளங்கியவர் கம்பநாட்டாழ்வாரென்பது பலரும் அறிந்ததேயாம். இராமாயணமென்னும் பக்திவெள்ளத்தை எல்லோரும் மடுத்து இன்பநுகருமாறு அதனைச் சீரிய செந்தமிழ்ப் பாடல்களால் அருளிய அவரது மஹோபகாரம் எக்காலத்தும் மறக்கற்பாலதன்று. அவருடைய அருமை பெருமைகளை எத்தனைமுறை எத்திப்புகழ்ந்தாலும் அதுவும் அவரது செய்ந்நன்றிக்குத் தக்க கைமாறுவதில்லை. ஆகையால் அவருடைய வரலாறுபற்றி இதுவரை பலரும் பலவகையாக ஆராய்ந்து பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் வெளியிட்டிருந்தாலும், நமது திவாகரம் நேயர்களின் பொருட்டு, அச்செந்தமிழ்ச் சான்றோரது தெய்வப்புலமை முதலிய சில்வற்றைக்குறித்து யானறிந்ததை இங்கு ஒருவாறு தொகுத்துரைக்க முற்படுகின்றேன்.

தமிழ்நாவலர்சரிதை, தொண்டைமண்டல சதகம், சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், புலவர்புராணம் என்பன போன்ற சிறுநூல்கள் சில கம்பர்வரலாற்றினை ஒருவகையாக உணர்தற்குக் கருவியாய் அமைகின்றன. அவரைக்குறித்துக் கர்ணபரம்

பரையர்க வழங்கிவரும் சிற்சில செய்திகளும் அவற்ருேடு சேர்த்துக் கொள்ளத்தக்கன. ஆனுலும் அப் பெருந்தகையாளரது சரித்திரத்தை உள்ளவாறு அறிதற்கு அவை போதிய ப்ரமாணங்களாகுமோ என்பது சந்தேகத்திற்கிடமாகவேயுள்ளது.

இனி கம்பர்தாமே இயற்றிபருளிய இராமாயணமும், ஆழ்வார் நூற்றந்தாதியென வழங்கும் சடகோபரந்தாதியும், அவற்றின் தனியன்களென்று அநுஸந்திக்கப்பெறும் சிறப்புப்பாயிரமும் போல்வன இவ்விஷயத்தில் த்ருடதரப்ரமாணங்களா மென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆகையால் அவற்றையே பெரும்பாலும் துணையாகக் கொண்டு எழுதப்படும் இக்கட்டுரையிலும் அமைவுடையனவற்றை அறிஞர்கள் ஆராய்ந்து கைக்கொள்வார்களாக.

கம்பர் உவச்சக்குலத்தில் உதித்தவரென்றும் வேளாண் மரபைச் சார்ந்தவரென்றும் பலரும் பலவாறு கூறுவர். அஃது எங்ஙனமாயினும் அவர் நான்காம் வருணத்தவரென்பது நன்கு தெளியலாகும். அவருடைய பெயர் கம்பர் என வழங்குவதன் காரணமும் பலவாருக உரைக்கப் படுவதுண்டு. * ஆயினும் அவையெல்லாம் உசிதமுடையனவாகத் தோன்றவில்லை. கம்பநாடென்பது ஒரு தேசவிசேஷத்தைக் குறிக்கும். ஆகையால் அதனடியாக ஏதோ ஒரு சம்பந்தம் பற்றி அவருக்குக் கம்பநாடரென்ற பெயர் வழங்கலாயிற்றென்று கொள்ளவேண்டும், "கம்ப நாடுடைய வள்ளல் கவிச் சக்ரவர்த்தி" என்பது இதற்கு ஒருசான்று. அந்த நாடு அவருடைய ஜன்ம பூமியென்ருவது, வாஸஸ்தலமென்ருவது அல்லது அவர் தமக்கு உரிமையாகப் பெற்ற தேசமென்ருவது உய்த்துணரத்தக்கது. ஆகவே கம்பர் என்னும் பெயர் கம்பநாடர் என்பதன் ஏகதேச மென்பதும் எளிதின் அறியப்படும்.

---

* அவை:—கம்பர் என்பது ஏகாம்பர முடையாரது திருப்பெயரின் மரூஉ என்பதும், இளமையிற் கம்பங்கொல்லையைக் காத்திருந்தமையால் எய்திய தென்பதும், கையிற் கம்புடன் அரசன் முன்னிலையிற் சென்று நின்றபொழுது இடப்பட்டதென்பதும், குழந்தைப் பருவத்தில் பெற்ருேரால் நீக்கப்பட்டுக் கோயிலின் கம்பத்தடியில் கண்டெடுக்கப்பட்டமையால் உண்டாகிய தென்பதும் பிறவுமாம்.

இனி, சோழ வளநாட்டுத் திருவழுந்தூரை அவர் உறைவிட மாகக் கொண்டவரென்பது பலர்க்கும் ஒப்ப முடிந்ததொன்று. ஆதித்தனென்னும் பெயருடையாரொருவர்க்கு அவர் புதல்வராய்த் தோன்றினரென்றும் சொல்லப்படுகிறது. அன்றியும் சோழன் முதலிய அரசர்களிடத்தில் அவர் நெருங்கிப் பழகி வரிசைகள் பெற் றனர். சடையப்பவள்ளலென்னும் தனிகரொருவர் அவரைப் பெரி தும் ஆதரித்துப் பேணுவாராயினர். தமது பிறந்தகமாகிய சோழ நாடு காவேரி இவற்றினிடம் கம்பர் பேரபிமானம் பூண்டிருந்தார். தமக்கு எக் காலத்தும் தளர்ச்சி வாராமற் காத்த சடையப்பவள்ள லிடம் அவர் சிறிதும் மறவாத செய்ந்நன்றி யறிதலும் உடையவரா யிருந்தார்.

இவையே யன்றி, கம்பர் மிகவும் விரைவினில் கவிபாடும் வல்ல மையுள்ளவர். அவர் திருவெண்ணெய்நல்லூரில் தங்கியிருந்து, வான்மீகம் முதலிய இராமாயணங்களின் பொருளை மறைவேதியரு டன் ஆராய்ந்து, தம் இராமாயணத்தை இனிதாக இயற்றிமுடித் தார்; பின்னும் அவர் பங்குனி யுத்தரமான நன்னாளில் ஸ்ரீரங்க நாதன் திருமுன்பு வித்வான்கள் பலர் கூடிய முன்னிலையில் அதனைச் செவ்விதின் அரங்கேற்றிச் சீரும் சிறப்பும் எய்தினர்; அப்பொழுதே அவர்க்கு ஆழ்வாரிடம் பரமபக்தி தலைப்படுத்து அவர் திருவருளுக் குப் பாத்ரபூதராகியும் விளங்கினர்; என்னும் இவ்வரலாறுகளெல் லாம் உண்மையானவையென்று கொள்வதற்குப் போதுமான ப்ரமா ணங்கள் உள்ளன.

மற்றும் இங்ஙனமே அவர் நாவீறு பெற்ற ஒரு மஹாகவி யென்பதை நன்கு துணிவதற்கு அவரது இராமாயணமும் அதன் பாயிரமும் ஆதாரவளிக்கின்றன. ஆனாலும் சாமான்யமாக அவரை ஒரு மஹாகவி யென்ற மட்டில் மதித்து விடுதல் அவர் பெருமைக்கு மிகுதியும் குறைபாடியற்றியதாக முடியும். ஏனெனில், அவர் பக்தி நிஷ்டராயிருந்ததேயன்றி, பகவத்கடாக்ஷத்தால் திவ்யஜ்ஞானம் பெற்ற ஒரு பாகவதோத்தமராயும் விளங்கினர் என்பதைத் தக்க மேற்கோள்களால் வலியுறுத்தல் கூடும். இராமாயணம் போன்ற பாரகாவ்யங்கள் இயற்றப் புகுவார்க்கு 'ஆக்கியோன் பெருமை'

என்று சொல்லப்படும் வக்த்ருவைலக்ஷண்யம் இன்றியமையாத தாகையால், கம்ப நாடரிடம் அது எவ்வளவாக அமைந்த தென்பதை ஆராய்தலும் இங்கு அவச்யமானதேயாம்.

கம்பநாட்டாழ்வாரென்ற அவருடைய சிறப்புப் பெயரே அவர் பெருமைக்குச் சான்று பகர்கின்றது. பகவத்பக்தியில் ஆழ்ந்து ஈடுபட்டவர்களை ஆழ்வார் என்ற பெயரால் வழங்குதல் நம்மவருடைய ஸம்ப்ரதாயமாகும். ஆகையால் அப் பெருமை பற்றியே கம்பருக்கும் அந்தத் திருநாமமிடப்பட்ட தென்பது கரதலாமலகம்.

"தாரதலத்திலுள்ளதமிழ்க்குற்றமெல்லாம்
அராவுமரமாயிற்றன்றே—இராவணன்மேல்
அம்புநாட்டாழ்வான்அடிபணியும்ஆதித்தன்
கம்பநாட்டாழ்வான்கவி."

என்பது இராமாயணத்தின் தனியன்களாயுள்ளபர்சுரங்களில் ஒன்று. இதன் பொருள்:—இராவணன் என்னும் அரக்கன் மீது பாணங்களை ஏவிப் பிறரெல்லாரையும் ஆட்கொண்டருளும் பெருமாளது திருவடிகளையே எப்போழுதும் வணங்குபவரும், இருளினை நீக்கும் இரவியைப்போன்று அஜ்ஞானத்தை அகற்றுபவருமான கம்பநாட்டாழ்வாருடைய கவியானது உலகத்தில் தமிழ் மொழியினிடம் தலை காட்டுகின்ற குற்றங்களை யெல்லாம் ஒருசேர அராவுதற்கு ஓர் அரம்போல விளங்காநின்றது; என்பதாம். கம்பர் இராமாயணமியற்றிய காரணத்தால் தமிழ் பாஷையே வீறுபெற்ற தென்பது கருத்து. அவருடையகவிகளில் ஒரொன்றே அமையுமென்று உணர்த்துதற்கு 'கவி' என ஒருமையாற் கூறினர். கம்பர் இராமபக்தியிற் சிறந்தவரென்பதும், அதுபற்றி அவர் ஆழ்வாரென அழைக்கப் பெற்றா ரென்பதும் இச்செய்யுளால் குறிக்கப்படுதல் காணலாம்.

இங்ஙனம் கம்பர் மேற்கொண்டிருந்த தீவிரமான ராமபக்தியே அவர் ஸ்ரீராமயணத்தைத் தலைக்கட்டியருளுதற்குக் காரணமாய் அமைந்தது. இவ்வுண்மை அவரது வாய் மொழியினின்றே வெளியாகின்றது.

"ஓசைபெற்றுயர்பாற்கடலுற்றொரு
பூனைசமுற்றவுநக்குபுக்கென
ஆசைபற்றியறையலுற்றேன்மற்றிக்
காசில்கொற்றத்திராமன்கதையரோ"

இது கம்பநாட்டாழ்வார் அவையடக்கமாகக் கூறிக்கொண்ட செய்யுள்களில் ஒன்று. அவையடக்கமாவது நைச்யாநுஸந்தாநம். இப்பாட்டின் பொருள் வருமாறு:—மிகுந்த உத்கோஷத்துடன் உயர்ந்து விளங்கும் க்ஷீராப்தியை அடைந்து ஒரு பூனை தன் நாவினால் முழுவதும் நக்கிப் பருகுவதற்கு உத்யோகித்தாற்போல, குற்றமற்ற வெற்றியுடன் விளங்கும் ஸ்ரீராமனுடைய நற்சரிதத்தை நானும் என்னுடைய ஆசையே காரணமாகப் பேசத்தொடங்கிவிட்டேன்: என்பதாம். இங்குள்ள 'ஆசை' யென்னும் பதத்திற்கு பக்தியென்றே அறிஞர்கள் பொருளுரைக்கிறார்கள். அதற்கநுகுணமாகவே கம்பர் மற்றோரிடத்திலும், "அன்பெனும் நறவம் மாந்தி, மூங்கையான் பேசலுற்றானென்னயான் மொழிபலுற்றேன்" என்று சொல்லியிருக்கிறார். பெருமாளிடத்துக் குற்றமின்மையும் வெற்றியுடைமையுமே அவரிடம் பக்தியை மிகுவித்தற்கு ஏதுவாயின என்பது தோன்ற, 'காசில் கொற்றத்திராமன் கதை' யெனப்பட்டது. பெருமாளுக்குக் குற்றமின்மையாவது, குணங்களாற் குறைவின்றி நிறைந்திருத்தல். வெற்றியுடைமையாவது, ஆச்ரிதர் விஷயத்தில் அநிஷ்டநிரசநமும் இஷ்டப்ராப்தியுமாவனவற்றைக் கடைக்கூட்டுவித்தல். இனி, காசின்மையைக் கொற்றத்திற்கு அடையாக்குதலும் ஒன்று. அப்பொழுது குற்றமில்லாத வெற்றியாவது, "பேராண்மை யென்ப தறுகண் ஒன்றுற்றக்கால், ஊராண்மை மற்றதனெஃகு" என்ற திருக்குறளின்படி தன்னைப் பகைத்தவனுக்கும் உபகாரம் செய்கிற தோல்வி யில்லாத வீரம் எனக் கொள்ளவேண்டும். பெருமாள் அங்ஙனம் உபகாரம் செய்ததை, "இன்றுபோய்ப்போர்க்கு நாளைவா" என அவர் இலங்கையர்வேந்தனுக்குக் கூறிவிடுத்ததனால் அறியலாம். இவ்விரு விசேஷணங்களையும் 'கதை'யோடுபொருத்தியுரைப்பினும் அமையும். கதைக்குக்கொற்றமாவது, ஸர்வாபீஷ்டபலப்ரதத்வம். பூனை பருகப் புகுந்த காரணத்தால் பாற்கடலுக்கு ஒரு பழுதுண்டாகாதவாறு போல, தாம்கவியியற்றப் புகுந்த காரணத்தால் இராமன் கதைக்கும் ஓர் இழுக்கில்லை யென்பதும் இதனால் குறிப்பித்தவாறாயிற்று.

அது நிற்க, இராமனுடைய கல்யாண குணங்களில் ஆழ்ந்து இன்புறுதல் கம்பநாட்டாழ்வாருக்கு நிரந்தர அநுபவமாகவே செல்லாநின்றது. ''கற்பார் இராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ'' என்றபடி தம் கரணத்ரயத்தாலும் ஸ்ரீராமனையே வழிபடுவதல்லாமல் கம்பர் வேறொன்றையும் கருதாதவராயிருந்தனர். இங்ஙனமாக அவருக்கெய்திய மாநஸாநுபவத்தின் பெருமையைக் கண்ணுற்ற பிறரெல்லாம், ''அத்தா அரியே என்றழைப்பன் நான் என்னைப் பித்தர் என்பர்''என்று ஆழ்வார் பணித்தமைக்கேற்ப, அவரைப் பித்தரென்றும், பேதை யென்றும், பக்தரென்றும் பலவாறு பேசத்தலைப்பட்டனர் போலும். அதுபற்றியே அவர், ''பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ'' என அவையடக்கம் கூறினரோ என்றும் அநுமானிக்க இட முண்டாகிறது.

அப்பாட்டு முழுவதும் வருமாறு:—

''முத்தமிழ்த்துறையின்முறைபோகிய
உத்தமக்கவிகட்கொன்றுணர்த்துவென்
பித்தர்சொன்னவும்பேதையர்சொன்னவும்
பத்தர்சென்னவும்பன்னப்பெறுபவோ''

இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழின் பாருபாடுணர்ந்த உத்தமக் கவிகட்கு நான் உணர்த்துவது ஒன்றுண்டு; பித்தர், பேதையர், பக்தர் என்னும் இவர்கள் சொல்லும் வார்த்தைகளில் குற்றங்குறைகள் ஆராயத்தக்கன அல்லவே? என்பது இதன் பொழிப்புரை. இதனால், கம்பர் தமக்குப் பித்தர் என்றும் பேதையென்றும் பக்தர் என்றும் ப்ரஸித்தி யுண்டென்பதை உடன்பட்டுக்கொண்டு, தமிழ்ப்புலவர்களுக்கு அதனையே தக்க சமாதானமாகக் கூறிவிடுத்தன ரென்பது உய்த்துணரத்தக்கது. ''எம்பிரானுக் கெழுமையும் பித்தனே'' ''பேதையேன் பேதையேனே'' என்னும் பெரியார் திருவாக்குக்களும் இங்கு நோக்கற்பாலன. எம்பெருமான் விஷயத்தில் பித்தாவது, அவன் பொருட்டு எழுந்த காதல் அளவுகடத்தலால் ஏனை உலகியலான அறிவை அழியச்செய்வது. பேதமையாவது, அவன் விஷயத்திலேயே உள்ளம் ஒடுங்கிவிடுதலால் வேறுள்ள பொருள்களில் விவேகமிழக்கச் செய்வது. பக்தியாவது, எல்லாம் அவனென்று இடை

யிடின்றி அன்பு செலுத்தி இன்புறச் செய்வது. இவை மூன்று தன்மையும் கம்பரிடம் ஒருங்கமைந்திருந்தன வென்பது கருத்து. இவ்வாறன்றி அவ்வடிகளுக்கு வேறு வகையாகவும் பொருள் செய்ய லாம். அப்பொழுது பித்தர், பேதையர், பத்தர் என்பனவற்றைத் தனித்தனிபிரித்து, அவரவர்கள் சொல்லும் வார்த்தைகள் ஆராயத் தக்கன அல்ல என்று முடிக்க வேண்டும். ஆனாலும் அது அவ்வளவு ஸ்வரஸமானதன்று. எங்ஙனமாயினும், கம்பர் ஒரு சிறந்த பக்தி நிஷ்டராய் விளங்கினவரென்பது இரண்டு பக்ஷத்திலும் நிராக்ஷேப மாய் முடிந்தது.

அன்றியும், பரிபூர்ணமான பகவதநுபவம் கைவந்தவரே கம்ப நாட்டாழ்வார் என்னும் இவ்வுண்மையை மற்றொரு ப்ரபலப்ரமாண மும் நன்றாக வற்புறுத்துகிறது.

"அம்பராவணிசடைஅானயன்முதல்
உம்பரான்முனிவரர்லயோகரால்உயர்
இம்பரால்பிணிக்கரும்இராமவேழம்சேர்
கம்பராம்புலவரைக்கருத்திருத்துவாம்"

என்னும் இச்செய்யுளும் இராமாயணத்தனியன்களுள் ஒன்று. இதன் பொருள்:—சிவன் அயன் முதலான தேவர்களும், மஹரிஷிகளும், யோகியர்களும், இவ்வுலகத்து உயர்ந்தவர்களும் ஆகிய எத்தகையோ ரும் எய்துதற்கரிய இராமனென்னும் மத்தகஜமானது தன்னடையே வந்து கட்டுண்டு நிற்கும் ஒரு கம்பமாய் விளங்குகின்ற கம்பரென் னும் தெய்வப் புலவரைக் கருத்தினுள்வைத்து வாழ்த்துவோமாக: என்பதாம். இதனுள் கம்பரைக் கட்டுத்தறியாகவும் இராமனை வேழ மாகவும் உருவகம் செய்திருத்தல் கண்டுகொள்க. இஃது ஏகதேச ரூபகம். நிச்சலமான பக்தியுடையவரென்பது தோன்ற கம்பரைத் தறியாக உரைக்கப்பட்டது. 'கம்பர்' என்கிற அவருடைய பெயரி லிருந்தே அப்பொருள் த்வநிக்குமாறு இப்பாடலில் அமைந்திருக்கும் நயமும் அறிந்து மகிழற்பாலது. யானைகட்டுந்தறியைக் 'கம்பம்' என வழங்குதல் 'கம்ப நெடுங்களியானை' என்பதனாலும் அறியலாகும். கம்பராகிய தறியை நினைந்து உபாஸிப்பவர்களுக்கு, அதனை விட்டு அகலாத இராமனாகிய வேழமும் நெஞ்சினுள் நீங்காது சிக்குண்டு நிற்கும் என்பது கருத்தாகக் கொள்க.

இனி, இராமனை யானையாக உரைப்பதிலும் பொருட்பொருத்தம் மிகுதியும் உண்டு. இங்ஙனமே "இருகை வேழத்திராகவன்" என்றதையும் நோக்குக. யானை பிறர் எவர்க்கும் அடங்காத பெருமையும் பாகனுக்கு வசமாய்க் கட்டுண்டு நிற்கும் எளிமையும் உடையது: எம்பெருமான் "பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய வித்தகன்" என்னும்படி பரத்வம், ஸௌலப்யம் ஆகிய இரண்டு குணங்களும் ஒருங்குடையவன். யானை தனக்கு உகவாதாரைக் கொலைபுரிந்தல்லது கோபந்தணியாது. எம்பெருமான் தன் திருவருள் பெறாத விரோதிகளை நிரஸித்தல்லது விடுவதில்லை. யானை எப்பொழுதும் ஓர் அபூர்வ வஸ்துவாய் பார்க்கப் பார்க்கப் பரமாநந்தமளிக்கும்: எம்பெருமான் "அப்பொழுதைக் கப்பொழுதென் ஆராவமுதமே" என்னும்படி எப்பொழுதும் அநுபாவ்யனாகவே இருப்பன். யானை தன்னைக் கட்டுவதற்குத் தானே கயிறு கொடுக்கும்: எம்பெருமான் "எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால்" என்கிறபடி பக்தியாகிய கயிற்றைத் தானே தந்தருள்வன். யானை பாகனநுமதியின்றித் தன்பக்கல் வருமவர்களைத் தள்ளிவிடும்: எம்பெருமான் "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்கிறபடியே பாகவதரை முன்னிட்டுப் புகாதவர்களை அங்கீகரித்தருளான். யானையின்மீது ஏற வேண்டுமவர்கள் அதன்காலைப் பற்றியே ஏற வேண்டும். எம்பெருமானை அடையவேண்டியவர்களும் அவன் திருவடிகளில் ஆச்ரயித்தே அடையவேண்டும். இவ்வாறே மற்றும் பல ஒப்புமை நயங்கள் இவ்விஷயத்தில் உரைப்பதுண்டு.

அவை யெல்லாம் ஒரு புறமிருக்க; கம்பநாட்டாழ்வாருடைய பக்தியின் பெருமையும் அவர்க்குண்டான பகவத்கடாக்ஷத்தின் அருமையும் மேற்கண்ட தனியன் பாசுரத்தினால் விசதமாய் விளங்கிவிட்டன. ஸாக்ஷாத் ஸர்வேச்வரனான ஸ்ரீராமனையே அவர் தமக்கு ஸ்வாதீனமாகப் பெற்றவரென்றால், ஆழ்வார் என்ற சிறப்புப் பெயர் அவர்க்கு வழங்கும் காரணம் எளிதின் அறியப்படுமன்றோ? இச்சிறப்புப்பற்றியே அக்காலத்து ஆன்றோர்கள் அவரை ஒரு தெய்வப் புலவரென்று கொண்டாடுவாராயினர். அது மட்டுமன்று. அவரிடம் அவர்கள் ஆசார்ய ப்ரதிபத்தியும் பண்ணிப் போந்தார்களென்பது

குற்றமாகாது. "கம்பராம் புலவரைக் கருத்திருத்துவாம்" என்ற தன் பொருள் ஆழ்ந்து சிந்திக்கற்பாலதன்றோ?

இங்ஙனம் கம்பருடைய தெய்வப்புலமையை நன்குமதித்ததேயன்றி, அவரது கழலிணைகளில் ஆராத பேரன்பு பூண்டவர்களும் அக்காலத்துப் பலரிருந்தன ரென்பதை மற்றுமுள்ள தனியன்கள் கொண்டு நிரூபிக்கலாகும். "கம்பநாடன் கழல் தலையிற் கொள்வாம்" என்றார் அவர்களில் ஒருவர். மற்றொருவர், "தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் பதத்தைச் சிந்திப்பவர்க் கியாது மரியதன்றே" என்றார். "மாதவன் கம்பன் செம்பொன் மலரடி தொழுது வாழ்வாம்" என்று கூறினர் வேறொருபுலவர். பின்னும் ஒரு பெரியார் "கம்பன் செங்கமலபாதம் கருத்துற இருத்துவோமே" எனப் பேசி இன்புறுவாராயினர். இவற்றால், கம்பரது திவ்யஜ்ஞானம்பற்றி அவரிடம் முன்னோர்கள் எவ்வளவாக ஈடுபட்டிருந்தனரென்பது இனிது விளங்குமன்றோ?

உலகத்திற் புலவர்களாய்த்தோன்றிப் புகழ்படைத்து, சான்றோர்களாற் சாற்றுக்கவியும் இடப்பட்டார் எத்துணையோ பலர் இருந்தனர்; என்றாலும், இங்ஙனமாகக் கம்பரைப் போலப் பெருமதிப்புடன் பாராட்டப்பெற்றவர்கள் மிகவும் அரியரென்றே சொல்லலாம். கேவலம் ஒரு மஹாகவி என்ற மட்டில் நில்லாது நேரே பகவத்ஸம்பந்தமும் பெற்ற ஏற்றம் அவருக்கு உரியதாயிருக்கும்பொழுது, மற்றைக் கவிவாணரோடுசேர்த்து அவரையும் ஒருவராக மதித்துவிடுதல் குற்றமாமென்பது சொல்லவும் வேண்டுமோ?

இவ்வாறாக அவர் ஏற்றமுடையராய் விளங்கிய தன்மையைக் கருதியே, ஆழ்வார் நூற்றந்தாதித் தனியனிலும்,

"தேவிற்சிறந்ததிருமாற்குத்தக்கதெய்வக்கவிஞன்
பாவிற்சிறந்ததிருவாய்மொழிபகர்பண்டிதனே
நாவிற்சிறந்தஅம்மாறற்குத்தக்கநன்னாவலவன்
பூவிற்சிறந்தஆழ்வான்கம்பநாட்டுப்புலமையனே"

என முன்னோர்கள் அவர் தகுதியை வியந்து கொண்டாடியுள்ளனர். தேவதேவனான திருமாலின் வைபவத்திற்குப் பொருந்துமாறு கவிசெய்யவல்லவர் திவ்யகவியாய்விளங்கிய ஸ்ரீசடகோபர் ஒருவரே; அந்தச் சடகோபருடைய வைபவத்திற்குப் பொருந்தியவாறு கவிசெய்யவல்லவரும் தெய்வப்புலவர் கம்பநாட்டாழ்வாரே; என்பது

இதன் கருத்து, இதனால், பெருமாளோடு ஆழ்வாருக்குள்ள சம்பந்தம் போன்றது ஆழ்வாரோடு கம்பருக்குள்ள சம்பந்தம் என்று அவரைச் சிறப்பித்துக் கூறியதாயிற்று. இது நிற்க;

கம்பநாட்டாழ்வாருடைய கவிகளை நம் பூர்வாசார்யர்களும் ப்ராமாணிகங்களென்று ஆதரித்துப்போருவர்கள். அதனாலும் அவர் பெருமை நன்குணரலாகும். ஆகையால் அது விஷயமாகச் சில்வற்றை இங்கு உதஹரித்து இந்தவ்யாசத்தை ஒருவாறு பூர்த்திசெய்வேன்.

"சுரக்குந்திருவும்" என்னும் இராமாநுஜநூற்றந்தாதிப் பாசுர (43) வ்யாக்யாநத்தில், பெரியஜீயர், "என்முடியாதெனக்கியாதேயரியது" என்று ஆழ்வார்நூற்றந்தாதி (29) யிலும் இப்படி ப்ரயோகிக்கப்பட்டதிறே; ஆகையாலே மஹாகவிப்ரயோகங்கள் இப்படி வரக் கடவதாயிருக்கும்" என்று கம்பர்வாக்கை யெடுத்துக் காட்டி மஹாகவிப்ரயோகமென்று அருளிச்செய்திருக்கிறார்.

"மஞ்சுலாஞ்சோலை" என்னும் பெரியதிருமொழிப்பாசுர (1-1-10) வ்யாக்யாநத்தில், பெரியவாச்சான்பிள்ளை, "ஜலத்தினுடைய ரஸ்யதையாலே 'ஈக்கள் வண்டொடுமொய்ப்ப' என்று ஆற்றுவரவுகளிலே சொல்லுவர்களாயிற்றுத் தமிழர்" என அருளிச்செய்திருக்கிறார். இந்தமேற்கோள் கம்பராமாயணம், ஆற்றுப்படலம், 10-செய்யுளைக்குறிக்கும்.

"காமுற்றகையறவோ" டென்னும் திருவாய்மொழி (2-1-3) ஈட்டில், நம்பிள்ளை, "செந்தீயுண்டு தேக்கிட்டதே. என்னக்கடவதிறே" என்று ஸாதித்தருளினார். ஜீயர் அரும்பதத்தில், "வயிறு நிறைய உண்டு என்றதுக்கு ஸம்வாதம் செந்தீயித்யாதி, கம்பநாடகத்திலே" என்று விவரணம் உரைக்கப்பட்டுள்ளது. அது கம்பராமாயணம், இலங்கையெரியூட்டியபடலம், 46-செய்யுளைத். திருவுள்ளம்பற்றியதாகும். அச்செய்யுள் வருமாறு:—

"என்றுகொல்குரங்கன்னதிவ்வலியுளதிலங்கை
நின்றுவெந்துமாநெறெழுகின்றதுநெருப்புத்
தின்றுதேக்கிடுகின்றது தேவர்கள்சிரிப்பார்
நன்றுநன்றுபோர்வலியென இராவணன்நக்கான்"

என்பது.

"நின்றவாறு மிருந்தவாறும்" (5-10-6), "ஞாலத்தூடேநடந்து" (6-9-3) என்னும் திருவாய்மொழிப் பாசுரங்களின் ஈட்டிலும் "கருணையென்னுங்கடல் கருங்கடலை நோக்கிக் கிடந்ததே" என அவர் அருளிச்செய்திருக்கின்றனர். அது கம்பராமாயணம், வருணனைவழிவேண்டுபடலம், 5-செய்யுளில் "கருணையங் கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி" எனவந்துள்ளது.

"வலையுளகப்படுத்து" என்னும் திருவாய்மொழி (5-3-7) வ்யாக்யாநத்தின் ஜீயர் அரும்பதத்தில், "தலைமகள் தலையாலே வணங்கும் என்றதுக்கு 'தீவினைதீர்வரம், வேண்டினள்தொழுதென்று விளம்புவாய்' என்று கம்பனும் 'தெய்வந்தொழாள் கொழுநற்றொழுதெழுவாள்' என்றுவள்ளுவனும் சொன்னதை ஸம்வாதமாகக் கண்டுகொள்வது" என அருளிச்செய்யப்பட்டது. இங்கே கண்ட கம்பராமாயணமேற்கோள், சூளாமணிப்படலத்தின் 35-செய்யுளைக்குறிக்கின்றது.

அவைநிற்க; இதுவரைசொல்லிய விஷயங்களால் கல்வியிற் பெரிய கம்பநாட்டாழ்வார் வரலாற்றை உள்ளவாறு அறிதற்குக் கருவியாவன இன்னவையென்பதும், அவர் பெயர்க்காரணமும் வரலாற்றுச்சுருக்கமும் இவையென்பதும், அவர் கவிசக்ரவர்த்தியாதலேயன்றி பக்திநிஷ்டராய் விளங்கிய பாகவதோத்தமரென்பதும், பகவத் ப்ரஸாதத்தால் தெய்வப்புலமை படைத்தவரென்பதும், ஆன்றோர்கள் அவரிடம் விசேஷப்ரதிபத்தி பண்ணிப்போந்தனரென்பதும், நம்பூர்வாசார்யர்களும் அவர் கவிகளை ஆதரவுடன் அங்கீகரித்தருளினரென்பதும், இக்காரணங்களால் இராமாயணமென்னும் தெய்வவான்பனுவலைச் செவ்விதின் இயற்றுதற்கு அவரிடம் வக்த்ருவைலக்ஷண்யம் பூர்ணமாகப் பொருந்தியிருந்தமை வெளிப்படையென்பதும் ஒருவகையாக உணரலாவன. அவரைப்பற்றி அறிதற்குரிய மற்றுஞ்சில விஷயங்கள், இனி வெவ்வேறு தலைப்பெயருடன் விவரித்தெழுதப்பெறும்.

ஸ்ரீ:

# தர்மம். *

[வித்தியா ரத்னாகர பண்டிதவர ஸ்ரீ. உ. வே.
வி. ஆர். நரஸிம்ஹாசார்யஸ்வாமி எழுதியது]

நண்பர்களே! தர்மமென்பது நம்தேசத்தில் பிரஸித்தமாய் வழங்கப்படுகின்ற புருஷார்த்தங்கள் நான்கினுள் முதன்மைவாய்ந்ததென்பதை நீங்கள் யாவரும் அறிந்திருப்பீர்கள். ஆனால் பொதுவாக தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம் பொருள் இன்பம் வீடு) என்று புருஷார்த்தங்கள் நான்கு வகைப்பட்டதாகவே நினைக்கப்படுகின்றதென்றாலும் அர்த்தமொன்றேதான் புருஷார்த்தமென்பாரும், காமமொன்றுதான் புமர்த்தமென்பாரும், அர்த்த காமங்களிரண்டுமே புருஷார்த்தமாகவேண்டுமென்பாரும், தர்மத்தையும் முக்கியமாய்க் கூட்டிக்கொண்டு மூன்றையும் புருஷார்த்தமென்பாரும், மஹாபுருஷார்த்தமான மோக்ஷமென்பதை முக்கியமாய்வைத்துக் கீழ்க்குறித்த த்ரிவர்க்கத்தையும் அதாவது தர்மார்த்த காமங்களென்கிற மூவகைப்புருஷார்த்தங்களையும் முன்னேவைத்து, மொத்தத்தில் புருஷார்த்தங்கள் நான்கென்றே நிர்ணயிப்பாருமான ஸித்தாந்திகள் பலரும் நம்மிடையுளரேதான்.

“𑌅𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌚𑌾𑌣𑌕𑍍𑌯𑌃” “அர்த்தம் ப்ரோவாச சாணக்ய:” சாணக்கியரென்கிற அர்த்தசாஸ்திரி அர்த்தமொன்றையே புருஷார்த்தமென்கின்றார்.

“𑌕𑌾𑌮𑌂 𑌵𑌾𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌯𑌨𑍋 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍” “காமம் வாத்ஸ்யாயனோப்ரவீத்” வாத்ஸ்யாயனரென்கிற காமதந்த்ரி காமமொன்றையே புருஷார்த்தமென்று குறிக்கின்றார்.

“𑌧𑌰𑍍𑌮𑌂 𑌤𑍁 𑌜𑍈𑌮𑌿𑌨𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌹” “தர்மந்துஜைமிநி: ப்ராஹ” மாமுனி ஜைமினியோவெனில் தர்மத்தையே பெரிதாய் மதிக்கின்றார்.

---

* இது, : 13—8—28ல் மதுரை ஸம்ஸ்கிருத காலேஜில் நரஸிம்ஹாசாரியஸ்வாமி செய்த உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

"மொக்ஷமெவ வாதராயணঃ" "மோக்ஷம்வை பாதராயண:" பகவான் பாதராயணரோ மோக்ஷமொன்றையே மஹாபுருஷார்த்தமென்று தீர்மானிக்கின்றார்.

நண்பர்களே! இப்படி இப்பெரியோர்கள் புருஷார்த்தங்களைப் பற்றி வெவ்வேறு அபிப்பிராயத்தைக்கொண்டதற்குக் காரணமென்ன? என்பதை நாம் நன்கறியவேண்டும். ஆதலின் அதன் கருத்தைச் சற்று ஆராய்வோம்.

"புருஷைரர்த்த்யமானத்வாத் புருஷார்த்த இதீர்யதெ" "புருஷைரர்த்தியமாநத்வாத் புருஷார்த்த இதீர்யதே" மனிதரால் விரும்பப்படுவதால், அல்லது மனிதர் அவச்யம் விரும்பவேண்டியதாயிருப்பதால் இவை புருஷார்த்தமெனப்படுகின்றன. எனவே புருஷர்கள் தத்தமக்கு வேண்டும்பயனென்று மதித்தது பற்றியே இவைகளைப் புருஷார்த்தங்களென்றதாயிற்று. ஆகவே மனிதரெல்லோரும் ஒருமித்து எதையேனுமொன்றையே குறித்துத் தமக்கும் வேண்டுமொரு பயனாக மதிப்பாராயிருக்கவில்லை. அவரவர் தத்தமது மனப்போக்கின்படி வெவ்வேறு பொருள்களையே விரும்புவாராயினர். அப்படி அவர்கள் மனம் ஒருதுறையிற்செல்லாமல் பற்பல வழிகளைப்பற்றியதற்குக் காரணந்தானென்னெனில்? இதுவேதான். மாந்தர்கள் தத்தமக்குவேண்டுமவையான பயன்களைப் பற்றித் தீர்மானிப்பதெல்லாம் அவர்களுக்குத் தம் தம்மைப்பற்றிய நிர்ணயத்திற்கேற்றபடியே யாகின்றன. என்றால் எவர் தம்மை எப்படி நினைக்கின்றாரோ அந்நினைவுக்குத் தக்கபடியே தமக்கு வேண்டும் பயனையும் அவர் தீர்மானித்துக்கொள்கின்றார். அத்தீர்மானத்தின்படி அதனையே தேடியும் திரிகின்றார். மனிதர் யாவருக்கும் தம்மைப்பற்றிய நிர்ணயம் ஒரே வகையாயிருக்குமானால் தாம் பெறவேண்டிய பயனும் அவர்கள் மனதில் ஒன்றாகவேதான் பதிந்திருக்கும். அஃதில்லாமல் பலர் தம்மைப்பற்றிப் பல்வகையாய் நினைத்துவிட்டதனாலேயே அவர்களுக்குத் தேவையான பயனும் வெவ்வேறாய்த்தோன்றலாயிற்று. இதை ஒரு உதாஹரணத்தினால் விளக்குவோம்.

ஒரு கோ (பசு) அல்லது ஒரு குதிரை இவற்றைக்கிட்டி உனக்கு வேண்டுவதென்ன? என்றோமானால் அதற்கு அவை நல்ல பசும்

புல் தவிடு கொட்டை கொள்ளு, என்று பதில் சொல்லுகின்றன. இப்படியே ஒரு ஸாதாரண மனிதனிடஞ்சென்று உனக்குவேண்டுவதென்ன? வென்றாலோ அறுசுவை யடிசலும் தெள்ளிய நீரும் மெல்லிய உடையும் பொன்னணிகள் பலவுமென்கின்றான். இது நிற்க; சீரியவரென்று மதிக்கப்பெற்ற சுரர்களை (தேவர்களை) யழைத்து நீவீர் நினைப்பதென்ன வென்றாலோ அதற்கு அத்தேவர், எமக்கு வேண்டியது அமுதமொன்றே யென்கின்றனர். இதற்குக் காரணமென்ன? அக்கவாச்வங்கள் அஃதாவது மாடு குதிரை இவைகள் அஹமர்த்தமான அஃதாவது நான் என்று தோன்றுகிற ஆத்மதத்வத்தை உண்மையாயறியமாட்டாது புல்லைத் தவிட்டைக் கொள்ளைக் கொட்டையைத் தின்று கொழுத்துத்திரிகின்ற கொம்பும் குளம்பும் வாலுந் தலையுமுள்ள கவாச்வ பிண்டங்களாகவே அஃதாவது தமது சரீரமாகவே தம்மைநினைத்துவிட்டன ஆகவே அச்சரீரத்திற்கு வேண்டியவற்றையே தமக்கு வேண்டும் பயனாக அவை தீர்மானித்தன. அப்படியே அச்சாதாரண மனிதனும் உள்ளபடிதன்னை யுணர்ந்திலனாய் அன்னபானாதிகளினால் போஷிக்கப்பெற்று வஸ்திராபரணங்களினால் அழகுபூண்டு மகிழும் சடலமெனும் இச்சடப்பொருளையே அஹமர்த்தமான (நானென்று தோற்றுகிற) ஆத்மதத்வமென்று மலைத்துப்போயினனாகலின் அவன் சோற்றுலெடுத்தசுவரேயான தனக்குவேண்டியது சோறும் நீருமே யென்கின்றான்.

தேவர்களென்றாலும் அவர்களும் தங்கம்போன்ற தமது தேஹத்தையே தாமென்று அபிமானித்திருக்கின்றாராதலின் அதனைக் கருக்காமல் இளைக்காமல் கிழமாகாமல் அழகழியாமற் காக்கின்ற அமுதமெனும் அருமருந்தையே விரும்பித் தேடுவாராயினர்.

ஆனால் இந்தப் பிராணிகள் எல்லாம் தாம் சுமந்துதிரியும் தேஹத்தையே தாமென்று மலைத்து மதியிழந்திருப்பதினால் ஆத்மவிஷயமான அஜ்ஞானத்தை (தம்மைப்பற்றிய உண்மையறியாமையை)ப்பற்றியமட்டில் இவற்றையெல்லாம் ஒரு நிலையிலுள்ளனவாகவே நினைக்கஇடமுண்டு. இதுபற்றியேதான் "ஜ்ஞாநெ நநவீ நः

வஶாவிஷஉாநஃ” “ஜ்ஞாநேநஹீன: பசுபிஸ்ஸமான:” என்று பழமொழியொன்றும் வழங்கலாயிற்று. புறப்பொருள் பலவற்றையும் கற்றுணர்ந்தவரேயாயினும் அகப்பொருளையறியாதார் மனிதரோ தேவரோ எவரேயாயினும் அறிவிலாப்பிராணிகளின் உறவினரே யாவர்.

நிற்க; பிரகிருதத்தை நாடுவோம். இப்படிப் பிராணிகள் தம்மைப்பற்றிய தத்வத்தையுணராததினாலன்றோ வெவ்வேறு பயன்களையும் வேண்டுவனவாயின என்றோம். இனி ஏன்தான் அவ்வாத்மாவின் உண்மை அனேகருக்கு விளங்காமற் போயிற்றெனின் ஆத்மதத்வமானது அவ்வளவு இலேசாக நிர்ணயிக்க வொண்ணாததாயும், ஐம்புலன்களுக்கு மெட்டாததாயும் அபூர்வ வஸ்துவாயிருப்பதினாற்றானென்க. இவ்வுண்மையை ஓர் உபநிஷத் வெகு அழகானவழியில் எடுத்துக்காட்டுகின்றது. அதுவருமாறு:—

வராஞி வாநி வ்யத்ருணக ஸ்வயம்ஹஃ। தஸ்மாக வராங வஶ்யதி நாஂநராத்மந ॥ “பராஞ்சி காநி வியதிருணத் ஸ்வயம்பூ:, தஸ்மாத் பராங்பச்யதி நாந்தராத்மந்.” மானிடரின் மனதிற்கு முன்னின்று அம்மனவாயிலாய் அவர்கட்குப் பொருள்களையுணர்த்துங் கருவியேயான புலன்களையெல்லாம் கேள்விமுறையில்லாத அப்பொல்லாத்தெய்வம் புறமுகமாகவே வைத்துப் பதித்துத்தொலைத்துவிட்டது. ஐயோபாவம்! ஆனதினாற்றான் இப் பேதைப்பிராணிகள் யாவும் புறப்பொருளையே நாடி அழிகின்றனவேயன்றி அகப்பொருளைக்கிட்டி மகிழ்வதைக்காணோம். இது ஸஹஜம்தானே. ரெயில் எஞ்ஜினின் புகைக் குழாய்க்கு முன்பதித்துக்கட்டியிருக்கிற காந்தவிளக்குத் தன்முன்னுள்ள பாதையில் ஒருகாதம் வரையில் ஒளியை வீசி யிறைக்கின்றதென்றாலும் தான் பதிந்துகிடக்கு மிடத்தைக் கூடக்காட்டமாட்டாத அவ்விளக்கையிட்டு வண்டித்தொடருக்கு ஏதேனும் வெளிச்சமுண்டோ? இல்லையே? ஏன்? அவ்விளக்கைப் புறமுகமாகவேயன்றோ பதித்துவிட்டனர். ஈதிப்படியிருக்கப் பாஹ்யமான இந்திரியங்களுக்கு பரவசமாய்த்திரியும் மனதைக்கொண்டு ஆந்தரமான ஆத்மஸ்வரூபத்தை அறிவதெப்படி?

எனவே நானென்று தோந்றும் ஒரு தோற்றத்திற்கு ஏதேனுமோரிடத்தைக் காட்டவேண்டியது கட்டாயமாகிவிடுகையில் அதன் உண்மையானவிடம் மனதிற்குத் தோன்றுவிட்டால் பொய்யிடத்தையாவது சொல்லிப் புலற்றுவது இயற்கைதானே. அவ்விதப்போலியிடங்களுக்குள் இச்சடலமே சடக்கெனத்தோன்றுமாதலின் இதனையே மாந்தர் பலர் தாமென்று மலைத்தனர். இனி இச்சரீராத்மவாதிகள் விரும்பும் புருஷார்த்தம் எதுவாயிருக்குமென்று புகுந்து பார்த்தால் காமம் ஒன்றேதானென்று நன்றாய்க் காணலாகும்.

பெரியோர்களே! இங்குக்காமமென்றது எதை? என்பதைக் கூறிவிடவேண்டியது அவச்யமாகின்றது. உலகவழக்கத்தில் பெரும்பாலும் ஸ்திரீ புருஷர்கள் எவர்கட்கேனும் அந்யோந்யம் உண்டாகின்ற காதலே காமமெனப்படுகின்றதாயினும் இங்குக்காமமென்றது அதனைமட்டுமல்ல. வேறுயாதெனின்? ஐம்புலன் வாயிலாக இச்சரீரத்திற்கு ஏற்படக்கூடிய ஸர்வஸுகங்களையுமே இங்குக்காமமென்றதாகக்கொள்ளவேண்டும். உதாரணமாக:— சந்தனத்தைப்பூசி மாலையைச்சூடித் தனயனைத்தழுவி மகிழ்வதெல்லாமே காமமென்பனவாம். அவற்றுள் காதலியின் தோளைக்கட்டியணைத்துக் களிப்பதும் ஒன்றாகும். ஆக இக்காமமொன்றேதான் புருஷார்த்தமாகுமென்றார் வாத்ஸ்யாயனரை முன்னிட்ட ரஸிகவரர்கள் பலர்.

இவர்களுக்கு விஷய போகங்களின் அநுபவத்தினால் வரும் ஆனந்தமொன்றே தான் புருஷார்த்தமென்ற கொள்கையெனச் சுருக்கமாய்ச் சொல்லிவிடலாம்.

அறுசுவை யடிசிலை யுண்டு களிப்பதும் உருசிபெறு தண்ணீருந்திச் சுகிப்பதும் வெறிமிகு மிருகமதம் புனுகு சாந்தணிவதும் சுருதி சேர்யாழ் குழலிடைச் செவி மடுப்பதும். பிரியமிகுபாவையின் வாயமுதம் வெக்கும் அரியமாமணிச் சிமிழெனு மிதழதரமும் விரி வுறுமுகமலர் மதுவதை மண்டித்திரியுமோர் மதுகரமிதுனமே ஈடுதனத்தகு மிருநயனேத்பலங்களையுங்கண்டு புளகாங்கிதமாவதும் இன்னும் இவை போன்ற ஆனந்தங்களெல்லாம் இதன் அவாந்தர பேதங்களே யாம்.

பெரியோர்களே! சரீரத்தையே அஹமர்த்தமான (நானென்று தோன்றுகிற) ஆத்மாவென்று தீர்மானமாய் நம்பியிருப்பவர்கள் அச் சரீரத்தைச் சார்ந்த ஸந்தோஷங்களான காமத்தைத் தவிர்த்து வேறெதைப் புருஷார்த்தமென்று நினைப்பார்கள்? ஆதலால் அவர்கள் காமமொன்றேதான் புருஷார்த்தமென்று முடிவு கூறிவிடுவது இயற்கையேதான்.

இனி, அர்த்தமொன்றே புருஷார்த்தமென்கின்ற அர்த்தசாஸ்திரிகளைப்பற்றி விசாரிப்போம். இங்கும் அர்த்தமென்கிறதெதை? என்று முதன்முதலில் விளக்கிவிடவேண்டும். உலகத்தில் ஸாதாரண மனிதர்கள் ரூபா மோகரா முதலிய நாணயங்களையே தனமென்கின்றனர். சில விசேஷக்ஞர்கள் இரத்தினம் முத்து முதலான விலைபெறும் வஸ்துக்களையும் இதனுள் சேர்த்துக்கொள்கின்றனர். அம்மட்டோடு அர்த்தசாஸ்திரிகள் நின்றுவிடவில்லை. மனிதரின் இன்பத்திற்கு இன்றியமையாதவைகளான வீடு வாசல் தோட்டம் துரவு பந்துமித்திரர் பெண்டு பிள்ளை முத்து இரத்தினம் பணம் காசு இவையெல்லாவற்றையுமே அர்த்தமென்று குறிக்கின்றனர். எனவே இவைகளுள் எதையேனும் பெற்றாலின்றி மாந்தருக்குக் காமமென்பதைக் கனவிலுங்காண முடியாதன்றோ! காமமென்பது இவற்றின் அனுபவத்தினாலுண்டாகின்ற ஆனந்தம்தானே. இது அர்த்தமுண்டானாலுண்டு. இல்லையானாலில்லையன்றோ!

இஃதிப்படியிருக்க; அர்த்தத்தைத்தாண்டிக் காமத்தைக் குறிப்பதற்குக்காரணமென்ன? அர்த்தமொன்றேதான் புருஷார்த்தம். காமமென்பது பொருளின்காலின் கீழே பதுங்கிக்கிடக்கின்றது. ஆதலால் அர்த்தமொன்றேதான் அறிவாளர் விரும்பிப்பெறுவதாகுமென்று ஸாதிக்கின்றனர்.

நண்பர்களே! இவ்விரண்டு கொள்கைகளையும் ஓரோரளவில் உண்மையானவையென்றே கொள்ளவேண்டும். போகங்கள் யாவும் பொருளின் கீழடங்கிக்கிடக்கின்றமையினால் பொருளே பெரியதென்பதும் பொருத்தமானதே. அநுபவமில்லாதார்க்கு அளவற்ற செல்வமிருப்பினும் அது அவலமேயாதலின் காமமெனகிற போக இரஸத்

தையே போற்றிப் பேசியதும் சிலாக்கியமேதான். ஆனதினுற்றுன் அர்த்தம் காமம் இவ்விரண்டையுமே புருஷார்த்தமென்று அறுதியிட்டார் புத்தியிற் சிறந்த பார்ஹஸ்பதர்.

இனி, தர்மத்தையே முக்யமாய்த் தேடிக்கொள்ளவேண்டுமென்கிற கர்மடர்களின் கருத்தென்னவென்பதை ஆய்ந்து பார்ப்போம். இவர்கள் அர்த்தகாமங்கள் மனிதருக்கு அவசியம் வேண்டியவையென்பதை அணுவளவும் மறுக்கவேயில்லை. ஆனுல் அவ்விரண்டையும் அடைவதற்குத் தர்மமொன்றே தக்கவழியென்று தீர்மானித்து அதைப் பெறுவதற்கே அனவரதம் பல்வகையிற் பாடுபடுகின்றனர். இவ்வழிக்கு அவர்கள் வந்ததற்கும் அவர்களுக்குத் தம்மைப் பற்றி ஏற்பட்டுள்ள தீர்மானமேதான் காரணமெனல் வேண்டும். இவர்கள் இச்சரீரத்தையே ஆத்மாவென்று நினைக்கின்றவரின் கோஷ்டியிற் சேர்ந்தவர்களல்லர். வேறு யாரெனின்? இச்சரீரேந்திரியாதிகளை அதிஷ்டித்துத்தாங்கி நிற்கின்ற ஒரு தனிப்பொருளே ஆத்மா என்ற நிர்ணயமுள்ளவராவார்.

இவர்களின் கொள்கைப்படி ஆத்மா, என்பது இச்சரீரத்தோடு பிறந்து இது நசிக்கும்போது தானும் நசித்துவிடக்கூடிய அநித்ய வஸ்துவல்ல. இச்சரீரத்துக்கு முந்தியும் பிந்தியும் பற்பல சரீரங்களிலும் புகுந்து வெளியேறும் நித்தியவஸ்துவே இது. இது, அவ்வச் சரீரங்களிலும் இந்திரியவாயிலாய் வருகின்ற இன்ப துன்பங்களையெல்லாம் அவ்வப்போது அநுபவித்தேதாளுகவேண்டும். ஆகவே சென்று போனவரையிலுள்ள சுகத்தையோ துக்கத்தையோ சிந்தித்துக் கொண்டே யிருப்பதில் விசேஷமொன்றுமில்லை யென்றுலும் வருங்காலத்தைப் பற்றிப் புத்திமான்கள் எவரும் ஜாக்கிரதைசெய்து கொண்டேயாக வேண்டும். அப்படிக்கின்றி இனியும் அவ்விஷயத்தில் அசட்டையாகவே யிருந்துவிட்டால் எதிர்பாராத விபத்துக்கள் னேகங்களுக்குள்ளாகி எதிர்காலத்தில் துயரமேபட வேண்டி வருமன்றே! ஆனதினுல் தீர்க்காலோசனையுள்ளவர் எவரும் தமது பிந்திய ஸௌக்கியத்திற்கு உரியஸாதனங்களை ஸாத்தியமானவரைக்கும் இன்றைக்கே சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். அது இந்தச்சரீர காலத்திலும் இச்சரீரத்தைத்துறந்து மறுவுடற்பெற்று

இப்பூவுலகத்திலேயும் அல்லது ஸ்வர்க்கம் முதலான லோகாந்தரத்திலுங்கூட அனுபவிக்கக் கூடியதாகையால் அதனைத் தவறாது சாதித்துக் கொடுக்கும் சாதனம் தருமமொன்றேதான்.

இப்போதைக்கும் எப்போதைக்கும் இஹத்திலும் பரத்திலும் நற்பயனைக்கிட்டிப் பெறுவதற்குத் தருமவழியொன்றேதான் தகுந்த வழி. எனவே சிரேயார்த்திகள் யாவருமே தருமமொன்றைத்தான் அபேக்ஷிக்க வேண்டுமாதலால் அவ்வொன்றேதான் புருஷார்த்தமென்பதிற் குறையென்னவிருக்கிறது? என்கின்றார் தர்மசாஸ்திர நிபுணர்கள்.

நண்பர்களே! இவர்கள் சரீராத்மவாதிகளைவிடச் சற்று அதிகஞ் சென்று சரீராதி விலக்ஷணமான ஆத்மவஸ்துவின் ஔச்சத்தை மட்டும் அறிந்திருக்கின்றனரென்றாலும் அவ்வாத்மதத்வத்தின் உண்மையை மட்டும் உணர்ந்துவிட்டாரெனபதற்கில்லை. ஏனெனில் இவ்வாத்மாவுக்குச் சரீரேந்திரியாதிகளின் வாயிலாகவரும் புறச்சுகங்களைத்தானே இவர்களும் போக்கியமென்று நினைத்திருக்கின்றனர். இதற்குப் புறப்பொருளொன்றையும் வேண்டாமலே தனக்குத்தானே மஹத்தான ஆனந்தமொன்றுண்டு என்பதை மனதிற் கொள்ளவேயில்லையன்றோ! எனவே இவரை அர்த்தசார்வாகரென்றாலும் பொருத்தமாகவேதானிருக்கும்.

நிற்க; மோக்ஷமொன்றையே மஹாபுருஷார்த்தமென்று மதிக்கின்ற மஹாபுருஷர்களான வியாஸாதிகளின் அத்தியவஸாயமென்னவென்பதைச்சற்று ஆராய்வோம். இம்மஹான்கள் ஜீவர்களுக்குச் சரீரேந்திரியவாயிலாக வருகின்ற சிற்றின்பங்கள் யாவும் வேப்பின் பழமேயனையச் சுகாபாஸமாத்திரங்களான துக்கங்களேதான். இவ்வாத்மாக்களுக்கு உடந்தையான அளவிடக்கூடாத ஆனந்தமேயான் பேரின்பவெள்ளம் தமக்குத் தானே உள்ளடங்கமாட்டாமற்றதும்புகின்றது. அதனை யறியமாட்டாதவிப்பேதைப் பிறவிகள் புறப்பொருளைப்பற்றி யலைகின்றன. அரசன்மகனே யானாலும் குறவர்கையிற் சிக்குண்டு குடிசையில்டைபட்டுக் கிடந்துழலும்போது கூழுக்குப் பறப்பானேயன்றித் தனக்குரிய செங்கோற்றாங்கி அரசு செலுத்தும் பெருவாழ்வை அவன் கனவிலுங்கருதானன்றோ!

அவன் தன்னை இராஜகுமாரனென்றறியமாட்டாத அவ்வளவு இளமையிலேயேயன்றோ அவனை அக்கபடக்குறவர் கைக்கொண்டுவிட்டனர். அவர்களின் மாயவலையில் வீழ்ந்தபின் வெளியேறுவது இலேசல்லவன்றோ! அதுபோலவே அஞ்ஞமாயையிலகப்பட்டுத் தவிக்கும் இச்சீவராசிகள் தமது உண்மையை உணரமாட்டாதவராய் இத்தேஹத்தையே தாமென்று மதித்து அதனைப்போஷிப்பதையே புருஷார்த்தமென்றுகொண்டு புலம்பித்திரிகின்றனர்.

பிரபுத்தரான பாக்கியவான்களோவெனில்; ஆத்மதத்வம் தேஹேந்திரியாதிகளைவிட விலக்ஷணமாய் குறைவொன்றுமில்லாத அகண்டானந்தஸ்வரூபமாயிருப்பதென்று தீர்மானித்துக்கொண்டு ஆனந்தப் பிரவாஹம் கரைபுரளுகின்ற அமிருதஹ்ருதம்போன்ற அவ்வாத்மஸ்வரூபத்தைக்கிட்டிப்பெற்று அதனுள் அவகாஹித்து அந்தமொன்றில்லா ஆனந்தரஸத்தை அநவரதமனுபவித்துச் சுகிக்கின்றனர். அப்போதிவருக்கு இப்பிரமன்பதவி முதலானவையும் நரகமெனத்தோன்றுமாம். பாக்கியவசத்தால் பழைய சிறைநீங்கி அரசனாகிச்சிங்காஸனத்திலமர்ந்து அரசுபுரியும்போது பழைய குடிசை வாழ்க்கையைப்பற்றிப் பேச்சொன்றுண்டோ? எனவே இத்தகைய மஹானந்தமயமான மோக்ஷமொன்றேதான் புருஷார்த்தமென்பதைவிடுத்து மற்றைய அர்த்தகாமாதிகளான ஆபாஸங்களை இத்துடன் சேர்த்துப் பேசுவதும் தகாது. என்று இத்தீர புருஷர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

நண்பர்களே! இம்மஹனீயர் இவ்விதநிர்ணயத்தைச் செய்வதற்கும் இவர்களுக்கு ஆத்மதத்வத்தைப்பற்றிய அசஞ்சலமான உண்மையுணர்வேதானென்பது உங்களுக்குச்சொல்லாமலே விளங்கும்.

நண்பர்களே! இஃதிவ்வாறிருக்க நீதிநிபுணர்களான மேதாவிகள் சிலர் இக்கல்பங்களிற்சேறொன்றுகிற விகல்பங்களை விலக்கி நடுநிலைவகித்துச் செல்வதற்குக் கைக்கொண்டுள்ள நல்லதொரு நீதிமுறையை இனி ஆராய்ந்து பார்ப்போம்.

தொடரும்.

ஸ்ரீ:

# யக்ஷப்ரச்நம்.

(149-ம் பக்கத்தொடர்ச்சி)

(உகூ) யக்ஷ:- 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌶𑍍𑌚 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰 𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑌃।
𑌏𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌕𑌥𑌮𑍇𑌕𑌤𑍍𑌰 𑌸𑌂𑌗𑌮𑌃॥
தர்மச்சார்த்தச்ச காமச்ச பரஸ்பர விரோதிந:
ஏஷாம் நித்யவிருத்தாநாம் கதமேகத்ர ஸங்கம:

(இ-ள்) அறமும் பொருளும் இன்பமும் ஒன்றற்கொன்று மாறுபாடுடையதாயிருக்கும்; என்றைக்குமாறுபடாத வேறுபாடுடைய இவைகளுக்கு ஓரிடத்திற்சேர்க்கை எப்பொழுதுண்டாம்? எ-று.

தர்ம:- 𑌯𑌦𑌾𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌚 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑌶𑌾𑌨𑍁𑌗𑍌।
𑌤𑌦𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌸𑌂𑌗𑌮𑌃॥
யதாதர்மச்ச பார்யாச பரஸ்பரவசாநுகௌ
ததாதர்மார்த்த காமாநம் த்ரயாணுமபி ஸங்கம:

(இ-ள்) (112) எப்பொழுது தர்மமும் மனைவியும் ஒருவருக்கொருவர் வசப்பட்டவராயிருப்பரோ அப்பொழுது அறம் பொருள் இன்பம் என்ற மூன்றற்கும் சேர்க்கையுண்டாம்; எ-ம்.

---

(உகூ) முன்னுரைக்கப்பெற்ற வேள்வி தானம் முதலிய அறங்கள் நடைபெறுதற்குப் பொருளும் இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியுமாகிய ஸாதனங்கள் அவசியம்வேண்டும். இவைகளோ ஒன்றற்கொன்று மாறுபாடுடையனவாயிருக்கின்றன. எவ்வாறெனின்; ஒருவன் பொருள்பெறுதற்கு க்ருஷி வாணிபம் ஸேவை முதலிய தொழில்களைச் செய்தாகவேண்டும். இத்தொழில்கள் தர்மத்திற்கும் காமத்திற்கு மாறுபாடுடையனவாமன்றோ! "உழவுக்கும் அக்னிஹோத்ரத்திற்கும் பொருந்துமா?" என்ற பழமொழியும் இதனை வலியுறுத்தும். இதனால் பொருளுக்குத் தர்மமும், காமமும் விரோதமுடையனவாமென்பது தெளிவாம். ஒருவன் காமத்திலே கருத்துடையவனாயிருப்பானாகில் அவனுக்குப் பொருள் விரையமும், தர்மக்கேடுமுண்டாகும். இதனால் காமத்திற்கு அறமும் பொருளும் விரோதமுடையனவாமென்பது பெறப்படும். அதுபோல அறமும் பொருளும் இன்பமும் ஒன்றற்கொன்று மாறுபாடுடையனவாயிருக்கத் தர்மம் எவ்வாறு நடைபெறுமென்று ஆசங்கையுண்டாக அதற்குச் சமாதானங் கூறப்படுகிறது.

(112) இல்வாழ்வானொருவன் சொற்றிறம்பாக் கற்புடைமனைவியுடன் இல்லறத்தை நடத்துமிடத்து அவன்செய்யும் தானமுதலிய அறங்களை அவள் தடைசெய்யமாட்டாள். அதனால் அவன் செய்யும் தர்மம் இனிது நடைபெறும். இதன்பயனாக "வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி, மிச்சில்மிசைவான்புலம்" என்றபடி பொருள்பெருகும். கற்புடைய மனைவியாகிய அவள் இன்பத்தை நிறைப்பாள். இங்கு அறம் பொருள் இன்பம் என்ற இம்மூன்றும் ஒருங்குகூடி நின்றமை காணலாம். இதனால் இல்

யக்ஷ: அக்ஷயோ நரக: கேந ப்ராப்யதே பரதர்ஷப।
ஏதந்மே ப்ருச்சத: ப்ரச்நம் தச்சீக்ரம் வக்துமர்ஹஸி॥

அக்ஷயோநரக: கேந ப்ராப்யதே பரதர்ஷப
ஏதந்மே ப்ருச்சத: ப்ரச்நம் தச்சீக்ரம் வக்துமர்ஹஸி.

(இ-ள்) பரதவம்சத்திற் சிறந்தவனே! முடிவற்ற நரகமானது எவனுலெய்தப்படுகிறது? என்னுடைய இக்கேள்விக்குச் விரைவில் விடையளித்தற்குரியவனுகிருய்; எ-ம்.

தர்ம:- ப்ராஹ்மணம் ஸ்வயமாஹூய யாசமாநமகிஞ்சநம்।
பச்சாந்நாஸ்தீதியோ ப்ரூயாத் ஸோக்ஷயம் நரகம் வ்ரஜேத்॥

ப்ராஹ்மணம் ஸ்வயமாஹூய யாசமாநமகிஞ்சநம்
பச்சாநாஸ்தீதியோப்ரூயாத் ஸோக்ஷயம் நரகம் வ்ரஜேத்.

(இ-ள் (113) I தரித்திரனை யாசகப்ராஹ்மணனைத்தானே யழைத்துப் பின் இல்லையென்று எவன் சொல்லுகிருனே அவன் முடிவற்ற நரகத்தையடைகிறுன்; எ-ம்.

வேதேஷு தர்மசாஸ்த்ரேஷு மித்யாயோவைத்விஜாதிஷு।
தேவேஷு பித்ருதர்மேஷு ஸோக்ஷயம் நரகம் வ்ரஜேத்॥

வேதேஷு தர்மசாஸ்த்ரேஷு மித்யாயோவைத்விஜாதிஷு
தேவேஷுபித்ருதர்மேஷு ஸோக்ஷயம் நரகம் வ்ரஜேத்.

(இ-ள்) II வேதம், தர்மசாஸ்த்ரம். பித்ருதர்மம் என்ற இவைகளேயும்; தேவர் அந்தணர் என்ற இவர்களேயும் எவன் பொய்யென்று சொல்லுகிருனே அவன் முடிவற்ற நரகமடைவான்; எ-ம்.

வித்யமாநே தநேலோபாத் தாநபோக விவர்ஜித:।
பச்சாந்நாஸ்தீதியோ ப்ரூயாத் ஸோக்ஷயம் நரகம் வ்ரஜேத்॥

வித்யமாநே தநேலோபாத் தாநபோக விவர்ஜித:
பச்சாந்நாஸ்தீதியோப்ரூயாத் ஸோக்ஷயம் நரகம் வ்ரஜேத்.

(இ-ள்) III போதுமான தனமிருந்தும் பிறர்க்குங்கொடாது தானும் அநுபவியாமல் இல்லையென்று எவன் சொல்லுகிருனே அவன் முடிவற்ற நரகத்தையடைவான்; எ-ம்.

தொடரும்.

---

வாழ்வானுக்கும் தர்மத்தினடியாக மோக்ஷத்தில் அதிகாரமுண்டென்பது பெறப்படும்.

(113) I II III அஸுரத்தன்மை, நாஸ்திகத்தன்மை, லோபம் என்ற இவைகள் நரகப்பிராப்தி முதலிய கொடியதன்பத்தைப்பயக்கு மென்பதாம்.

ஸ்ரீ:

# ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ப்ரதாயாபி வர்த்திநீ ஸபா.

இந்த ஸபையானது ஸ்ரீவானமாமலைமடம் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஒன்னான வானமாமலைராமாநுஜஸ்வாமி திருநக்ஷத்திரத்தில் (கன்யாபுனர்வஸு மஹோத்ஸவத்தில்) நீண்டகாலமாக நடைபெற்றுவருவதை யாவருமறிவர். நாளது விபவஸு புரட்டாசிமாதத்திலும் இவ்வுத்ஸவம் ஹைதராபாத் ஸீதாராம்பாக்கில் ஆரம்பிக்கப்பெற்றுப் பிரதிதினமும் மாலை 3 மணிமுதல் 6 மணி வரை வாக்யார்த்தங்களும், உபந்யாஸங்களும் மிகவும் விமரிசையாக நடைபெற்றன. வித்வான்களால் சொல்லப்பட்ட உபந்யாஸங்களையும், வாக்யார்த்தங்களையும் ஸங்க்ரஹித்து முடிவில் தினந்தோறும் ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீஸ்வாமிகள் எல்லோரும் எளிதிலுணருமாறு தெலுங்கிலும், ஹிந்திபாஷையிலும் தெளிவாக உபந்யஸித்தருளினார். அக்காலத்து ஸ்ரீவரதராஜன்ஸந்நிதி ஸ்ரீவைஷ்ணவர்களும், பாடசாலை வித்யார்த்திகளும், ஸேட் ராமலால், ஸேட் ராஜாபன்ஸீலால் நிஸ்மல், ஸேட் வஹந்த ஸீதாராம்ஜீ, நாதமுனி நாயுடுகாரு, வெங்கடரத்ன நாயுடுகாரு, ரத்ன ஐயா முதலானவர்களும் வந்திருந்தார்கள்.

---

## ஸபையில் நடைபெற்ற விஷயங்கள்.

முதல்நாள். ஸ்ரீபாஷ்ய பாவாங்குரே:—விஜயராய் கந்தாடை சடகோபாசார்யர்.

இரண்டாம்நாள். ஆநந்தமயாதிகரணம்:— வித்வான் வானமாமலை ஐயங்கார்.

மூன்றாவதுநாள். அத்வைதம்:—(ந்யாயபாஸ்கரத்திலிருந்து) திருப்பதி காலேஜ் புரசை கிருஷ்ணமாசார்யர், வித்வான் வானமாமலை ஐயங்கார் (வாதரூபமாக)

## ஸ்ரீராமாநுஜஸித்தாந்த ஸம்ப்ரதாயாபிவர்த்திநீஸபா

நான்காவதுநாள். அந்தராதிகரணம்:—சேரன்குளம் வித்வான் வரதாசார்யர்.

பராதிகரணம்:—வைத்தமாநிதி சடகோபாசார்யர்.

ஐந்தாவதுநாள். வாக்யாந்வயாதிகரணம்:—சிரோமணி சடகோபாசார்யர்.

ஆறுவதுநாள். ஸாம்ராயாதிகரணம்:—மைசூர் ராமாநுஜாசார்யர்.

ஏழாவதுநாள். ந்யாயபாஸ்கரம்:—மைசூர் ஐயமாசார்யர்.

எட்டாவதுநாள். ந. விலக்ஷணத்வாதிகரணம்:— மைசூர் ஐயமாசார்யர்.

ஒன்பதாவதுநாள். பகவத்விஷயம் "தீர்ப்பாரை" (உபந்யாஸ ரூபமாக) வித்வான் வானமாமலை ஐயங்கார். "வந்தருளி" "நோற்றநோன்பு" (உபந்யாஸ ரூபமாக) சிரோமணி சடகோபாசார்யர்.

பத்தாவதுநாள். மணவாளமாமுநிகள்:—ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீஸ்வாமிகள்.

பின்னர், எல்லா வித்வான்களுக்கும் அவரவர்க்கேற்றவாறு ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீஸ்வாமிகளால் ஸன்மானிக்கப்பெற்று உத்ஸவம் இனிது நிறைவேறியது.

இங்ஙனம்,

சிரோமணி, த. சடகோபாசார்யர்,

ஸ்ரீவானமாமலை மடம்,

Camp. சீதாராம்பாக்,

ஹைதராபாத்.